1993 ஏப்ரல் 8]

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் திட்டத்தின் கீழ் ரூ 5 ஆயிரம் நிதி உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஏழை விதவைகளின் மகள் திருமணத்திற்கு ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை மாண்பு மிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள் 2 ஆயிரமாக உயர்த்தி, இப்போது அந்த நிதியை வழங்கிக் கொண்டு வருகிறோம். விதவைகளின் குழந்தைகளுக்கு பாடநூல்கள், மற்றும் குறிப் பேடுகள் வழங்கப்படுகின்றன. விதவைகளுக்கு இலவசமாக தையல் இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. சேவை இல்லங் களிலே விதவைகளுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகிறது. மற்றும் தையல், எம்பிராய்டரி, துணி தைத்தல் போன்ற தொழில்களிலும் சேவை இல்லங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது பல்லாவரம் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் விதவைகளுக்கு முன்னுரிமை வழங் கப்படுகிறது. இது தவிர, சமூக நலத்துறை, சத்துணவுத் துறை மற்றும் உடல் ஊனமுற்றோர் துறைகளில், வேலைக்கு விண்ணப் பங்கள் அளித்து இருந்தால், அவைகளில் விதவைகளுக்கு முன் னுரிமை அளிக்கப்பட்டு, அந்த விதவைகளுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 298, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

பரமத்தி வேலூர் வட்டத்தில் ஆதிதிராவிடர், தாழ்த்தப்பட்டோ ருக்கு காலனி கட்டுவதற்கு நிலப்பட்டா வழங்கல்.

298—

* 10802 திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) சேலம் மாவட்டம், பரமத்திவேலூர் தாலூகாவில் ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோருக்கு காலனி கட்ட பெருங் குறிச்சி, இராமதேவம் போன்ற இடங்களில் நிலம் கையகப்படுத்தி நிலப்பட்டா வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சேலம் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், இராம தேவம் கிராமத்தில் வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்தப் பட்டு விட்டது. இங்கு வீட்டுமனைப் பட்டாக்கள் விரைவில் வழங்கப்படும். பெருங்குறிச்சி கிராமத்திலும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க தகுதியான நிலம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது.

[1993 ஏப்ரல் 8

திருமதி ப. சரஸ்வதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாழ்த்தப்பட்டோர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நத்தம், புறம்போக்கு ஆகியவற்றில், பட்டாக்கள் கொடுக்கப்பட்டு, வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், நான் குறிப்பிட்ட பெருங்குறிச்சி, இராமதேவம் போன்ற பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்கள் பாறையின் மேல் குடியிருக்கிறார்கள். 100 குடும்பங்கள் அங்கே வசிக்கின்றன. அப்பகுதியில் காவிரி ஆறு ஓரமாக இருக்கிற காரணத்தால், அங்கே இருக்கக்கூடிய நிலச்சுவான்தாரர்கள் நிலத்தைக் கொடுக்க முன்வருவதில்லை. வழக்கு மன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். பலகாலம் நிலுவையில் இருக்கக்கூடிய அந்த வழக்குகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே முடித்து, அந்த நிலத்தை எடுத்து, அந்த ஏழை அருந்ததியர் மக்களுக்கு விரைவில் நிலப்பட்டா வழங்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கோரிக்கை இரண்டையும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்டு எந்தக் கிராமம் என்று சொன்னால், அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினா எண். 299, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

299—

வெம்பக் கோட்டை நீர்த்தேக்கத்திலுள்ள மீன் வளர்ப்புப் பண்ணை.

*10558.—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தில் எந்தெந்த வகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன ?

(ஆ) இந்த மீன் வளர்ப்புப் பண்ணையால் அரசின் வருமானம் ஆண்டிற்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தில் கட்லா, ரோகு, மிர்கால், சாதாக்கெண்டை, வெள்ளிக்கெண்டை போன்ற பெருரக மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, மீன்பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது.